யார் இப்படி விற்றிருக்கிறார்கள் என்று ஆதாரப் பூர்வமான புகார்கள் வந்தால், அவற்றை ஆய்ந்து பார்த்து, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, ஸ்டாம்ப் பேப்பர் விற்பனையில் முறைகேடுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறதே, எந்தெந்தத் தேதிகளில் ஸ்டாம்ப் பேப்பர்கள் விற்கப்பட்டன, எவ்வளவு ஸ்டாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அந்த விவரத்தைக்கொண்டு, பரிசீலனை செய்ய ஏற்பாடு நடைபெற்றிருக்கிறதா? அப்படிச் செய்தால் அதிலே ஊழல் நடந்திருக்கிறது என்பதைச் சுலபமாக அறிய முடியுமே ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, ஸ்டாம்ப் விற்பனையாளர்களிடம் எப்படி நீங்கள் அதிக விலைக்கு விற்றீர்கள் என்று கேட்க முடியாது. அப்படி அதிக விலைக்கு வாங்கியவர்கள் அதற்கான ஆதாரத்துடன் கூட புகார்களைச் சொன்னால், இதைக் கண்டுபிடிக்க முடியும். எவ்வளவு ஸ்டாம்புகள் யார் யாரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு விற்பனையாகியிருக்கின்றன, எவ்வளவு ஸ்டாக் இருக்கின்றன என்பதையெல்லாம்குறித்து பதிவுத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு விவரங்கள் அனுப்பப்படுகின்றன.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, ஒன்றரை மாதங்களுக்கு முன்பு, மதுரை நகரில் திருட்டுத்தனமாக முத்திரைத் தாள்களை அச்சிட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அது உண்மைதானா? அது உண்மையென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ரிஜிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்களிடத்தில் இதற்கான தகவல் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. அவரிடம் கேட்டால் விவரம் அளிப்பார்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, பத்திரம் விற்பனையாளர்களுக்கும், அரசுக்கும் கமிஷன் கொடுப்பதிலே தகராறு ஏற்பட்டு, அந்த விஷயம் கோர்ட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதன் மீது அரசு விற்பனையாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு கூறியபின் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை மாண்புமிகு திரு. என். வி. நடராசன் அவர்களிடத்தில் கேட்டால் விவரம் கிடைக்கும்.

அருமலைக்கோட்டை நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை

* 590 வின.—திரு. க. ர. நல்லசிவன் : மாண்புமிகு நிதியமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், அருமலைக்கோட்டை என்னும் கிராமத்திலுள்ள காவிரி–மேட்டூர் பாசன நிலங்களுக்கு விதிக்கும் தண்ணீர்த் தீர்வை ஏக்கருக்கு எவ்வளவு?

(இ) 1374, 1378 ஆகிய பசலி ஆண்டுகளுக்குத் தாங்கள் செலுத்திய தண்ணீர்த் தீர்வை விவரங்களை அந்தக் கிராம விவசாயிகள் கோரினரா?

(உ) ஆம் எனில், விவரம் கொடுக்கப்பட்டதா?

(எ) அந்த விவரங்கள் யாவை?

1970 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) வரிவிதிப்பு தண்ணீர்த் தீர்வை விகிதங்கள் வருமாறு :

நிலத்தின் வகை. (1)	வரிவிதிப்பு. (2)	தண்ணீர்த் தீர்வை ஒரு எக்கருக்கு. முதல் போகம். (3)	இரண்டாம் போகம் (4)
	ஒரு எக்கருக்கு ரூ. காசு.	ரூ. காசு.	ரூ. காசு.
நன்செய்	16 62	..	9 00 (பசலி ஜாஸ்தி)
புன்செய்	1 75 முதல் 2 37 வரை.	10 00	5 00
மானவாரி நிலங்கள்	2 37	9 00	4 50

(இ) இல்லை.

(உ) ஆம். (எ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தண்ணீர்த் தீர்வை விதிக்கிறபோது முதன்முறை சாகுபடிக்கு விதிப்பதைவிட இரண்டாவது சாகுபடிக்குக் குறைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் கொடுத்த விடையைப் பார்த்தாலே தெரியும். முதல் போகச் சாகுபடிக்கு விதிப்பதில் பாதியாகத்தான் இரண்டாவது போகச் சாகுபடிக்கு விதிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : உணவு உற்பத்தியிலேயே கவனம் செலுத்தி வருகிற தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலாவது தண்ணீர்த் தீர்வையைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : காவேரி நதியைக்கொண்டு சாகுபடிசெய்து வருகிற டெல்டா பிரதேசம் அது. அந்த மாவட்டத்திற்கு 40 கோடி செலவில் வடிகால்களைத் திருத்தி அமைப்பது, சாலைகளைப் புதுப்பிப்பது ஆகிய திட்டத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் குறிப்பிட்டபடி எடுத்து நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

திரு. பி. வேலுசாமி : விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்படுகிற தண்ணீரை அளவிட்டு, அந்த அளவின் பேரில் தீர்வை விதிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

(பதில் இல்லை)

திரு. நா. சௌந்தரபாண்டியன் : புதிய பாசனத்தின்கீழ் தண்ணீர் பெறுகிற நிலங்களுக்கு எந்த அடிப்படையில் தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒவ்வொரு இடத்திற்குமே ஒவ்வொரு முறையில்தான் தீர்வை விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகின்றது.

திரு. அ. மாரிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் ஒரு போக நிலங்களை இருபோகமாகச் சாகுபடி செய்யுமாறு மாநாடுகள்மூலம் எடுத்துக் கூறி வருகிறார்கள். அப்படிச் செய்கிறவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலாவது இரண்டாவது போகச் சாகுபடிக்கு 3 ஆண்டுகள் தண்ணீர்த் தீர்வை வசூலிக்காது இருப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வழக்கமாக இருபோகம் சாகுபடி செய்கிற நிலங்களுக்கு அல்லாது—பசுமைப் புரட்சி வந்த பிறகு ஒரு போக நிலத்தில் இரு போகம் சாகுபடி செய்ய முன்வந்தவர்களுக்கு சென்ற ஆண்டு தண்ணீர்த் தீர்வை வசூலிக்கப்படவில்லை.

திரு. அ. ஆறுமுகம்: தண்ணீர்த் தீர்வையை ஒரு தடவையாக வசூலிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, 2 தவணை முறையில் வசூலிக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தது. தண்ணீர்த் தீர்வை குறைவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்படி கேள்விகள் 591, 592 ஒத்திவைக்கப்படுகின்றன.

Cattle feed mixing centre at Madurai.

*593 Q.—THIRU K. M. RAMASWAMY GOUNDER: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any proposal to start a cattle feed mixing centre at Madurai; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) மதுரையில் கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் புதிய தொழிற் பிரிவு ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவுமில்லை. ஆனால், ஸ்ரீவில்லிப்புத்தூர் பால்வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும், காரைக்குடி பால் வழங்கு கூட்டுறவுச் சங்கத்திலும் உள்ள நாளொன்றுக்கு 3 டன் உற்பத்தித் திறனளவு கொண்ட இரு சிறு கால்நடைத் தீவனக் கலவை இயந்திரங்கள், உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படுகிற தானியங்களைக் கொண்டு கால்நடைத் தீவனம் தயாரிப்பதற்காகத் தற்காலிகமாய் மதுரை பால் பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளன.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: மற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் துறையை விஸ்தரிக்க யோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஸ்ரீவில்லிப்புத்தூரில் இருந்து கால்நடைத் தீவனங்களைக் கலவை செய்யும் இயந்திரங்கள் மதுரைக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டதற்குக் காரணம் என்ன? நிரந்தரமாக அங்கேயே ஒரு நிலையம் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கே கொண்டு போய் அமைப்பதன் மூலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விநியோகிக்க வழியேற்படும் என்பதுதான். அது பலனுள்ளதாக இருக்குமானால் நிரந்தரமாக்கப்படும். புதிய இயந்திரங்களும் தருவிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: கூட்டுறவு பால் பண்ணைகளுக்கே இந்தத் தீவனங்கள் வழங்கப்படுகின்றன. தனிப்பட்டவர்களும்கூட பால் பண்ணை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வழங்க சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நல்ல யோசனை. தனிக் கேள்வி போட்டால் பரிசீலிக்கலாம்.